கழக வெளியீடு - ககஎ

உ

திருச்சிற்றம்பலம்

திருமலைமுருகன்

பிள்ளைத் தமிழ்

செங்கோட்டை
கவிராஜ பண்டாரத்தையா அவர்கள்
இயற்றியது.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
திருநெல்வேலி, & சென்னை.

விபவ - தை

PUBLISHED BY
The South India Saiva Siddhanta Works,
Publishing Society, Tinnevelly., Ltd,
TINNEVELLY, AND MADRAS.
February 1929

Printed by
C. Munisawmy Mudaliar & Sons, Madras.

பதிப்புரை.

இனிய மெல்லிய இழுமெனுஞ் சொற்கள் வாய்ந்த தமிழ்மொழியில், அவ்வினிமை நலம் பொருந்திய பாட்டுவகைகளே முழுதும் அமைந்திருக்கின்றன. அவையெல்லாவற்றுள்ளும், அவ்வினிமை நலத்தினைச் சுவை மிகுத்துக் காட்டுவது பிள்ளைத்தமிழ்ப் பாட்டாகும். மக்கள் வாழ்நாள் முழுமையினும், 'பிள்ளைப்பருவ'மென்பது எத்துணை இனிமையானதோ, அத்துணை இனிமையானதே ஏனைத்தமிழ்ப் பாட்டுக்களினும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டென்பது. இனிக் கோவைப்பாட்டும் அனையதொன்றேயாயினும், அது களங்கமற்ற அன்பினிமை யுடையதன்றாம். மற்றுப், பிள்ளைப்பருவம் களங்கமற்ற நல்லெண்ணத்தையும், அவ்வெண்ணத்தின் வழியே களங்கமற்ற தூய அன்பையும் விளைப்பதாய்த் திகழ்தலால், அவைதம்மைப் பெற விரும்புவோரும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டுக்களில் உள்ளம் இடையறாது பழகுதல் இன்றியமையாததாகும். கடவுளிடத்திலும் பெரியாரிடத்திலும் அன்பிற் பழக விரும்பும் ஆசிரியன்மார்கள், அவர்களை அவ்வன்பிற்கினிய குழந்தைப் பருவத்தராய் உருவெண்ணி, ஆண்பாலானால் ஆண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும் பெண்பாலானாற் பெண் குழந்தைகளின் விளையாட்டு வகைகளையும் அமைத்து இனிய கொஞ்சு தமிழ்ச் சொற்களாற் பாடுகின்ற நூலே பிள்ளைத்தமிழென்க.

அவ்வகை வந்த பிள்ளைத்தமிழ் நூல்களுள் இத்'திருமலை முருகன் பிள்ளைத்தமி'ழும் ஒன்று. திருமலை யென்னும் முரு

கப்பெருமான் திருப்பதி, செங்கோட்டையை அடுத்துள்ளது. இப்பிள்ளைத்தமிழைச் சொல்லும் பொருளுஞ் சுவை விஞ்சும் படி இதன் ஆசிரியர் **கவிராஜ பண்டாரத்தையா அவர்கள்** மிகத் திறமாகப் பாடியிருக்கின்றார்கள்.

இதற்கு, முன்னும் பல பதிப்புகள் உளவேனும், திருத்தமான அழகிய புதுப்பதிப்பொன்று வேண்டப்படுகின்றமையின், இப்போதிதனை யாம் பதிக்கலானேம். தமிழுலகம் இதனருண்மையை யறிவதாக!

உ

திருச்சிற்றம்பலம்

திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்

காப்பு

வெள்ளைக் கணபதியை வேய்ந்தசடி லப்பெருமான்
பிள்ளைக் கணபதிதாள் பெற்றுரைத்தேன்—வள்ளியுடன்
வந்தகந்தன் காவி மலைபோல வாழவருட்
டந்தகந்தன் பிள்ளைத் தமிழ்.

அவையடக்கம்

பிள்ளைத் தமிழாம் பெரியபசுஞ் செந்தமிழை
வெள்ளைத் தமிழாய் விளம்பினேன்—னெள்ளுறுமென்
புன்மொழியைக் காட்டிப் புனிதத் தமிழ்ப்புலவோர்
நன்மொழியை மேம்படுத்த நான்.

க. காப்புப் பருவம்

திருமால்

[இந்நூற்குத் திருமால் வணக்கம் முதற்கண் கூறப்புகுந்த தென்னை யெனின், "மங்கலம்பொலியுஞ் செங்கண்மாலே சங்கு சக்கரந் தரித்தலானும், காவற் கடவுள் ஆதலானும், பூவிணட் புணர்தலானும்" என்பவாகலான்]

சீரார் கமலத் திருவின்ற
　　தெய்வப் பிடியுங் குறக்கொடியுஞ்
சேரும் பெருமாள் வேற்பெருமாள்
　　செந்திற் பெருமாள் மயிற்பெருமாள்
காரார் குடுமித் திருமலையிற்
　　கருணைப் பெருமாள் குகப்பெருமாள்
கந்தப் பெருமாள் முத்தொழிலுங்
　　காக்கும் பெருமா னைக்காக்க
பாரா யிழையைத் திருமகளைப்
　　பாரப் புயத்திற் றிருமார்பிற்
பதிக்கும் பெருமாள் வேயினிசை
　　பாடும் பெருமாள் பசும்பெருமாள்
ஆரா வமுதங் கடைந்தமரர்க்
　　கருளும் பெருமா டிகிரிசங்கம்
அணியும் பெருமாள் முதலைதடிந்
　　தானை காத்த பெருமாளே. க

சிவபெருமான்

வேறு

வனநதி யறுகு சிறுபிறை யிதழி
வளர்சடை முடியின் மீதினிற் சேர்த்திய
வரதனை நடன பரதனை யிமய
மடமயி றழுவும் வாமனைப் பாற்கடல்
வரமுனி மதலை யழவருள் புரியு
மழவிடை யுடைய பாகனைக் கார்க்கடு
மணிமிட றொளிரு மமலனை நமனை
வதைசெய்த சரண மாமலர்ச் சேர்ப்பனை
இனிமுனி வரர்க டவமுய லிடமு
மினியபண் மொழியு மாரணக் கூட்டமு
மிருநில வனிதை முலையணி தரள
மெனவிழு மருவி நீருகத் தூற்றிய
வியல்பெறு வளமை பழமையு முடைய
வெழில்வரை யெழிலி தோயுமுக் கோட்டினி
லிலகிய பலவி னிழலமர் கடவு
ளெழுதிய சபையி லீசனைப் போற்றுதும்
அனகனை யெமது குலகுரு பரனை
யருள்பெறு மமரர் சேனையைக் காத்துமு
னடையலர் மனது படபட படென
வடலயி னடவு வீரனைக் கார்த்திகை
யழகிய புழக களபமென் முலையி
னமுதுணு மிளைய பாலனைத் தீர்த்தனை
யருமறை முடியி னடமிடு பரனை
யறுமுக குகவி சாரனைத் தேர்ப்பொலி

தினகர ரொருபன் னிருவரு மொளிக
டிகழுடு பதியு மேகுதற் கேக்குறு
சிகரியி னழகு சினகர மருவு
திருமதி ளெயிலின் மேற்றிசைப் பாற்படு
தெரிவைய ரெழுபெண் ணரசியர் தமது
திருவருள் புரியும் வாவியிற் பூத்திடு
தினமொரு குவளை மலர்தனை யுதவு
திருமலை விசய வேலனைக் காக்கவே. உ

உமையம்மை

வேறு

நிறம்வ ளர்த்திடு நீலிசொற் பாத்தரு
நிமலி மட்டவிழ் தாமரைத் தாட்டுணை
நினைப வர்க்கருள் கோமளக் கோற்றொடி
நிலைமை பெற்றிரு நாழிநெற் சேர்த்துல
கறம்வ ளர்த்தவ டியபொற் கோட்டிம
வசல புத்திரி யாமளை கார்த்திகை
யருளு டைக்குழல் வாய்மொழிப் பார்ப்பதி
யடியி ணைப்புகழ் தானெடுத் தேத்துதும்
மறம்வ ளர்த்தநி சாசரச் சீற்றர்கள்
வலிதொ லைத்தசு ரேசனைத் தாக்கியோர்
மயின டத்திய வீரனைச் சூர்ப்பகை
மறவ னைக்கதிர் வேலனைத் தேக்குறு
திறம்வ ளர்த்தசி வாகமப் பாற்கட
றனைம தித்ததி லேயெடுத் தூற்றிய
தெருளொ ழுக்கமு தீசனுக் கூட்டிய
திரும லைக்குரு நாதனைக் காக்கவே. ௩

உச்சிப்பிள்ளையார்

வேறு

சுரரை வளைத்துத் தலைமிசை குட்டித்
தொகைலோகக் காப்பினர்
தொழிலை யடக்கிக் கொடுமை செலுத்தித்
தொலையாமைத் தேக்கொடு
செருவி லெதிர்த்துப் பொருத தயித்தியத்
திறலாணைப் போர்ப்புரி
திருமலை யுச்சிக் கணபதி பற்பச்
சிறுதாளைப் போற்றுதும்
அரவு பிடித்துச் சடையணி கொற்றத்
தரனுர்கட் டப்பொறி
யறுவகை முற்றிச் சரவண முற்றிட்
டடியாரைக் காத்தொரு
பிரணவ நுட்பப் பொருளை விரித்துப்
பிரமாவைத் தாக்கிய
பிரச மலர்க்கட் குவளை மலைக்குட்
பெருமாளைக் காக்கவே.

திருமகள்

வேறு

இச்சைக் கிசைந்த வரங்கொடுக்கு
மெங்கள் குவளைத் திருமலையை
யேத்து மடியார் வீட்டகத்தி
லெங்கோன் மாமன் மார்பகத்திற்

பச்சைப் பசுந்தாட் செங்கமலப்
புனிப்பூம் பொகுட்டிற் குடியிருக்கும்
பவளத் துருவத் திருமடந்தை
பாகத் துணையைப் பணிந்திடுவாங்
கொச்சைக் குறவர் குலச்சிறுமி
குமரி குறத்தி பசுநிறத்தி
கொங்கைக் குவட்டிற் குடைந்துமற்றக்
குவட்டுக் கிரியைத் தகர்த்துழக்குஞ்
செச்சைப் புயபூ தரத்தழகன்
செழிக்குந் திருச்சண் முகத்தழகன்
செவ்வே லழகன் பண்பைநகர்ச்
செவ்வேள் பனுவ றழைக்கவே. ௫

நாமகள்

உதரத் திடையி னுலகொடுக்கி
யுமிழ்ந்தோ னிருவர்க் கொருகொழுந
னுந்தி மலரின் வந்துதித்த
வொருநான் முகத்தன் றிருமனையாள்
அதரச் சிவப்பி குழல்விழிக
ளழகு கறுப்பி யுடலிடம்பூ
ணுடை முறுவல் வெள்ளைநிறத்
தம்மை வாணி பதம்பணிவாம்
மதுரக் கவிதை மழைபொழியும்
வரத வருணை கிரிமேகம்
வழங்குந் தமிழ்மா ரியிற்றோய்ந்து
வளர்பன் னிருபொன் வரையின்மிசை

கதிர்நித் திலமுஞ் செம்மணியுங்
கடம்புங் குரவும் வள்ளிகொங்கை
களபப் புழுகுங் கமழ்ந்திலகுங்
கந்தன் கவிதை செழிக்கவே. கூ

பிரமதேவன்

படியேழுலகும் படைத்துயிர்க்கும்
பலவேறுருவம் படைத்ததிலே
பரிந்துமுகமே தமும்படைத்துப்
பாராய்பனுவ லாட்டியென்று
பகரவதற்கு நிகராக
முடியாவாணி யவன்படைத்த
முகங்கடோறு மிருந்திருந்து
மொழியும்பேதங் காட்டமின்னை
முழுதுமகிழ்ந்து நாவில்வைத்த
முளரிப்பிரமன் சரண்பணிவாம்
வடியாக்கடலைச் சிறைபுரிந்து
மழலைச்சீதை சிறைமீட்ட
மாயன்மருகன் வச்சிரத்தால்
மலையின்சிறையைத் தடிந்தவிண்ணோன்
மதலைசிறையைத் தீர்த்தசுரக்
கொடியோனுடற்கே நான்குசிறை
கொடுத்துநடத்திக் கொடியுயர்த்த
குமரக்கடவு டிருமலையிற்
குடிகொண்டிருந்து விளையாடுங்
குரிசில்பனுவ றழைக்கவே. எ

காளி

வேறு

பண்ணம் பணத்திதிரி சூலிகௌ மாரியொரு
பாலைக் கிழத்திநீலி
பச்சைப் பசுங்கமாரி கொற்றப் பெரும்படைப்
பசாசுவே தாளமுடையாள்
கண்ணன் றிருத்துணைவி கைச்சக் கரக்கௌரி
கல்வா கனக்கபாலி
கதிகொடுத் தாளுமென் றிருமலைக் காளிசெங்
கமலசர ணம்பணிகுவாம்
வண்ணங் கறுத்திரு மேனியொரு பாதியின்
வடிவக் கருங்கடலினீர்
மட்டுமிஞ் சிப்பெருகி யப்புறச் செம்மையில்
வழிந்தொழுகும் வாறிதெனவே
நண்ணுந் திருக்கந்த ரத்தில்விடம் வைத்தருளும்
நகரீசர் மார்பிலணியு
நாமவெள் ளைப்பொடிப் புழுதியா டுங்குமர
நாயகன் கவிபெருகவே. அ

வள்ளிதேவயானை, கன்னிமார், சத்தமாதர்கள்

வேறு

தருவிற் கிறையுங் குறவர்களுந்
தவளக் களிறுஞ் செம்மானுந்
தலைமை பெறவந் துதித்தருளுந்
தாய்மா ரிருவர் சரண்போற்றி

மருவிட் டொழுகும் பைங்காவி
வாவிக் கரையின் மேவுகன்னி
மார்களெழுவர் சத்தகுல
மாத ரிவர்கள் சரண்பணிவாந்
துருவைப் பரியிப் பேரடலைத்
துணைவன் கரத்தாற் றுடைத்தேறின்
சூரைத் துடைத்தங் கவன்செனனத்
துயரைத் துடைத்துச் சொல்லவுணர்
கருவைத் துடைத்தோ ரயிராணி
கண்ணீர் துடைத்து மெய்யடியார்
கவலை துடைத்த திருமலையிற்
கந்தன் கவிதை விளங்கவே. கூ

வீரபத்திரர், வயிரவர், சாஸ்தா, அட்டவசுக்கள், ஏகாதச ருத்திரர், அசுவினிதேவதைகள், சந்திரன், ஆதித்தர், பதினெண்கணம், சப்தரிஷிகள்

வேறு

வட்ட நிலத்தொ டடுக்குல கத்துள
வஞ்ச மொழிந்திடவே
மலைதக ரும்படி மயினட வுஞ்சிறு
மதலையை யெந்தையையே
சிட்டர்க ளுத்தம பத்தி மிகுத்திடு
சிந்தை மகிழ்ந்திடவே
திருமலை யின்குவ டதனி லுறைந்தருள்
சிவசுத கந்தனையே

துட்டன் மகத்தை யுழக்கிய விக்ரம
　　　　தும்மி நிரம்பியசீர்
　　தொலைவறு திண்டிறல் வயிரவ ரிம்பர்க
　　　　டொழுமணி கண்டனுமே
அட்ட வசுக்க ளுருத்திரர் மருத்துவ
　　　　ரம்புலி செங்கதிரோன்
　　அருள்பதி னெண்கண முனிவர் புரந்தர
　　　　னமரர் புரந்திடவே. ம

காப்புப்பருவ முற்றும்

உ. செங்கீரைப் பருவம்

[இருகையு முழந்தாள்களு மூன்றித் தலைநிமிர்த்தியாடும் பருவம்; ஐந்தாந் திங்களில் நிகழ்வது.]

மனத்தினி னினைத்துருகு முத்தமரு ளத்தின்மிசை
　　　　மங்காத வேதமுடிமேன்
　　மயிற்பரி திருப்பொலி புறத்தென தகத்தினெடு
　　　　வன்போரின் மேடமிசையே
புனற்சடை முடிக்கடவு ளற்புத மடிக்குளுமை
　　　　பொங்கார மார்புதனினீ
　　பொருப்பினை முதற்சிறை யறுத்தவிச யத்தினெடு
　　　　பொன்றுத தேவர்தலைமேல்

அனத்திணை யுயர்த்தவன் முடித்தலை யினிற்சுரர்க
ளன்பான வாறுதலைமே
லணிச்சமு முருத்திய பதச்சிறு குறச்சிறுமி
யம்பாகு நீலவிழியாள்
திணைக்கதிர் வனத்திலு மலர்ச்சரணம் வைத்தருக
செங்கீரை யாடியருளே
திருக்கிளரு முற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை யாடியருளே. கக

கூராடும் வேல்வழிகள் குழையிலா டக்குழைகள்
கொண்டாடு தோளிலாடக்
குறுவியர்வு திருநுதற் சிலையிலா டச்சுட்டி
கூடத்து வண்டாடவே
வாராடு பொன்மார்பின் மாலையா டத்தரள
மாலையொடு சேலையாட
மலராடு செங்கைதனில் வெள்வளைக ளாடநின்
மனதுநின் றூசலாடத்
தாராடு மைக்குழல் சரிந்தாட வல்லியிடை
தள்ளாட நகையாடியே
தளிராடு கற்பகச் சோலையிற் பந்தாடு
தனியானை முலையானைமேற்
சீராடு மான்மதச் சேறாடு மொருகளிறு
செங்கீரை யாடியருளே
திருக்கிளரு முற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை யாடியருளே. கஉ

மங்காத கற்பகக் காவினிற் செந்திணையின்
வனசர மிசைப்பிறந்து

வண்மைச் செழுஞ்சர வணப்பொய்கை நதிசரமும்
வாழவே தவமுயன்று
பொங்கார மூங்குரவு நீபமுஞ் செச்சையும்
பூங்குவளை யுங்கோடலும்
பூத்துப் பொலிந்தழகு வாய்த்திலகு பன்னிரு
புயக்கிரி சரத்தைமேவுங்
கொங்கார் கதுப்பிளங் குஞ்சரியு மஞ்சரிக்
கோதைக் குறப்பிடியுமே
குணபேத மில்லா திடத்தினும் வலத்தினுங்
கூடப் பிணைக்கநடுவோர்
சிங்கார வச்சிரத் தூண்போ லிருப்பவன்
செங்கீரை யாடியருளே
திருக்கிளரு முற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை யாடியருளே. கக

கொந்துகமழ் சரவணப் பொய்கையின் மருங்கிலிரு
கோட்டொருவெள் ளேற்றிலேறிக்
கூர்மழுக் கையனுந் தையலுந் திருவுளங்
கூடக் கசிந்துருகியே
வந்துமக வாறுருவு மோருருவ மாகவே
மங்கைபார்ப் பதியெடுத்து
மடியில்வைத் துச்சியின் முகந்துபுற நீவிமணி
வாய்தோறு முத்தமிட்டே
இந்துமுக மண்டலத் துமைமங்கை கொங்கையி
னிழிந்தொழுகு பாலைவள்ளத்
தேந்திக் கொடுக்கக் குடிக்குமப் போதுபனி
ரண்டுகடை வாயின்வழியே

சிந்திவழி கின்றதென முத்தணியு மார்பனே
செங்கீரை யாடியருளே
திருக்கிளரு முற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை யாடியருளே. கசு

கால்பெயர்த் தசைநடைக் கொண்டுநளி னத்திலை
கறித்துக் குதட்டுமேதி
கன்றுக் கிரங்கிக் கனைத்துநீர் விட்டுமுற்
கால்வாரி நின்றுமுலையின்
பாலுகுத் திடவது பரந்தோடி முப்பழப்
பங்கச் செழுங்கழனியிற்
பாய்ந்தொழுக வதனிடை கிடந்து சேறாடும்
பருங்கரும் பகடுபூட்டிச்
சாலடித் துழுமுழவர் மார்பினிற் றோளினிற்
றலைதொறு முகங்கடோறுந்
தளிரடிப் பிடிநடைச் சாதிக் கடைசியர்க
டங்கணய னங்கள்போலச்
சேல்குதிக் குந்திருப் பண்ணைநக ராதிபதி
செங்கீரை யாடியருளே
திருக்கிளரு முற்பல மலர்த்திரு மலைக்குமர
செங்கீரை யாடியருளே. கஎ

வேறு

இனமுனி வரர்கள் குருமுனி குருபர
னென்றே கொண்டாடு
மிவையவ ரொடுபொரு பகைநிசி சரர்பதி
யெங்கே யென்றேகி

மனவலி புயவலி படைவலி தவவலி
மஞ்சா ருஞ்சூரன்
மதலைக் டுணைவர்கள் கிளையுட னவனுடல்
வன்பா ரந்தீர
நளினமலர் சிதறியு மரியயன் முதலினர்
நண்போ டும்பாட
நகைமணி வளையணி கரதல வயிறொடு
நம்பா சங்க்ராமா
தினகரர் விழியையு மருள்செயு மொருமணி
செங்கோ செங்கீரை
திருமலை யறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை. ௧௬

பசையறு நெஞ்சுடை யவுணர் பெரும்படை
பஞ்சாய் நொந்தேழ
பரவையின் மிசைபுக வலைகெட வடகிரி
பந்தாய் நின்றாட
விசையி னுறங்கிய திகிரி நெடுங்கிரி
விண்டே சென்றாளாய்
விடவிட வரவொடு கமடமு மசைவுற
வெந்தீ யுங்காலும்
இசைபெறு மண்புனல் வெளியுட னைந்தெனு
மெண்பூ தஞ்சோர
இமையவர் முனிவர்க டுயரொடு மகிழ்வி
ரண்டோ டொன்றேழ
திசைசுழ லும்படி மயினட வும்பதி
செங்கோ செங்கீரை

திருமலை யறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை. கஎ

கொந்து கமழ்ந்திடு குஞ்சியு மூவிரு
குலமணி மௌலிகளுங்
கோக நகங்களொ ராறு மலர்ந்தன
குளிருந் திருமுகமுஞ்
சந்த மணங்கமழ் கந்தர முங்கிரி
தண்டிய திண்புயமுந்
தனியயி லுங்கர தலமு மிலங்கிய
சந்துறு நடமார்புந்
தொந்தி தருஞ்சிறு பண்டியு மேலணி
சுந்தர வரைஞாணுந்
துகிலும் பரிபுர பதமுங் கொடுதுயர்
துலையும் படியடியார்
சிந்தையி னின்று நடம்புரி யுங்குக
செங்கோ செங்கீரை
திருமலை யறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை. கஅ

மகரக் கடலிற் கடுவிட முண்டவன்
வளையா வலியாலு
மாயக் காலுக் குடைபட் டுருளா
மணிமுடி பெறலாலும்
நிகரொப் புவமை யிலாத சுதந்தர
நீவிளை யாடியநா
ணெரிபட் டடிபட் டுன்னு னிலைகுலை
யாதுவி ளங்கியதாற்

றகரக் கருமைக் கோதைய ரம்பையர்
தயவுறு கொழுநருடன்
றடவட வரையினு மிவைபெரி தெனவே
தங்கி யிருந்தேகுஞ்
சிகரிப் பண்பைத் திருநக ரதிபதி
செங்கோ செங்கீரை
திருமலை யறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை. ௧௯

காயொடு பூவொடு கனியுறு மாவுங்
கண்டமி ரண்டாகக்
கண்டகர் நெஞ்சமு லைந்துகு லைந்து
கலங்கி மலங்கியழப்
பேயொடு காளி நடஞ்செய வும்பர்
பிழைத்தோ மென்றாடப்
பேருல குய்ந்து சராசர கோடி
பிராணி தழைத்தாடத்
தாயொடு தமரு மிலாத வதீதன்
றழல்விழி வழிதோன்றித்
தண்டிய வண்ட நிரம்பிய காலின்
தலையொரு வாகனமாய்த்
தீயொடு நீரொடும் வருமிடி யேறே
செங்கோ செங்கீரை
திருமலை யறுமுக சரவண பவகுக
செங்கோ செங்கீரை. ௨௰

செங்கீரைப்பருவ முற்றும்

௫. தாலப் பருவம்

[தொட்டிலிட்டுத் தாலாட்டும் பருவம்; ஏழாந் திங்களில் நிகழ்வது]

பண்டைக் கொடிய தீவினையும்
பழிக்குங் குலமு நானெனுமோர்
பகையுந் தீர்த்திட் டிம்மையிலே
பரிந்து மனது குழைந்துருகுந்
தொண்டத் தொகையி னுடன்கூடித்
தொனிக்க வினிக்குந் திருப்புகழைச்
சொல்லித் துதிக்க நல்லியலாந்
தொலையா வாழ்வு கொடுத்தருளி
அண்டத் திறைவன் பொன்முடிக்கு
மமலக் கமலன் மணிமுடிக்கு
மமரர் முனிவர் தலைகளுக்கு
மணியப் பணியக் கிடையாத
தண்டைப் பதத்தை யெனக்களித்த
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. ௨௬

மையற் குறவர் குறத்தியர்கண்
மருளு மடம்போய்த் தெருளெய்த
மான்கள் பசியு மனப்பயமு
மறந்து சுரந்த மடிப்பாலைப்

பையப் பதுங்கும் புலிப்பிணவின்
பறழுக் கருத்திக் கொலைமறந்த
பாரப் புலிதன் முலைப்பாலைப்
பன்றிக் குருளைக் கினிதூட்டக்
கையிற் கவணிற் பதித்தமணிக்
கல்லு முருகக் கிளிகடியை
கவரா திருந்து கசிந்துருகக்
கனிவா யாலோ லம்புகலுந்
தையற் குறத்தி மனமுருக்குஞ்
சமர்த்தா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. உஉ

நீடுங் கருணைத் திருவருளா
னீதூ தனுப்ப விடைவாங்கி
நெடிய கடலைக் கடந்திலங்கை
நீரி லழுந்தக் குதித்தவுணர்
கூடும் பதிம கேந்திரத்தின்
குணபால் காக்குங் கயமுகனைக்
கொன்று சயந்தன் சிறைச்சாலை
குறுகிக் குகவுன் வரவுரைத்துச்
சூடு மகுடச் சூரன்முன்போய்த்
தூது பகரச் சூரனெதிர்
சொல்லச் சீற வல்லையிலோச்
சுடர்க்கோ புரத்தா லயன்கொலுவைச்
சாடும் வீர வாகுதுணைத்
தமையா தாலோ தாலேலோ

தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. ௨௩

செப்பா மோனப் பரமசுகச்
செங்கைக் கருநெல் லியங்கனியே
திருக்கார்த் திகைபார்ப் பதிமுலைப்பா
னேக்கு மொருசெம் பொற்குடமே
கொப்பார் குழைச்சி குறத்திகொங்கைக்
குவட்டி லணியுஞ் செம்மணியே
குளிருஞ் செழுங்கங் கையிற்பிறந்த
கோமே தகமே கூர்வடிவேல்
அப்பா வரசே யுமைமடந்தைக்
கருமைக் குருந்தே கண்மணியே
யமரர் விருந்தே வுலகினுயி
ரனைத்தும் புரக்கு மருமருந்தே
தப்பா விரதப் பெருமான்சந்
ததியே தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. ௨௪

கன்னங் கரிய மாலிடத்தே
கலந்து விளங்குந் தாணுவின்மேற்
கண்ணி னுதித்தோ ராறுருவாய்க்
கான்மேலேறிக் குளம் புகுந்து
மன்னு முயிருக் குயிராகி
வடிவொன் ருகிப் பலமுகமாய்

வளர வயலுஞ் சோலையினும்
வாவிதோறும் விளையாடி
அன்ன மிருபா லிருக்கவிசைந்
தார்க்கும் வேலை நடத்திமகிழ்ந்
தன்பு புரிந்து பரிந்துபுரிந்
தடுத்தோர் பரவச் சூர்தடிந்துன்
றன்னைப் பொருவு மனுமநதித்
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. உரு

குமரன் சரணஞ் சரணமென்று
கூறிச் சுரர்கள் சரண்புகுதக்
கொடியோர் மனத்திற் பயம்புகுதக்
கொலையுங் களவுங் கெடிபுகுத
அமர ருலகங் குடிபுகுத
வவுணர் பதியி லெரிபுகுத
வடையா ருயிர்கள் சொர்க்கமுட
னழல்வாய் நரகம் போய்ப்புகுதத்
துமிர்த வலையா ழியிலவுணர்
சோரிக் கடல்போய்ச் சுரந்துபுகத்
துங்க வீர வாகுசொன்ன
சொல்லுப் புகுதாச் சூரனெஞ்சிற்
சமர வடிவேல் புகவெறிந்த
சதுரா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ. உ௬

வேறு

மதமலே துணைவா குறமகள் கணவா
வானோர் கோமானே
மலைமகள் புதல்வா வறுமுக முதல்வா
வாகா மோகாரா
பதபரி புரனே முகவசி கரனே
பாலா சீராளா
படைபொர வசையா ரணமுக விசையா
பாராள் சூரேறே
சிதமுறு குழகா வதிசய வழகா
தேனே பாலாறே
சிவகுல திலகா வவகுல கலகா
தேவே சேயோனே
சதமகன் மருகா திருமலே முருகா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனியயில் வலவா
தாலோ தாலேலோ. உஎ

வேறு

இந்து நெடுஞ்சிலே சந்திர திலக
மிரண்டு முரிஞ்சிடவே
யிந்துவொ டுஞ்சிறு தென்றல் வருந்தொறு
மிளகி நறுஞ்சேறுய்க்
கொந்து கமழ்ந்து வழிந்ததை யாவின்
குழூவிடு மெருவெனவே
கூடைக டோறு மெயிற்றியர் வாரிக்
குடின்மெழு கக்குறவர்

செந்தினை யோடு கருந்தினை யள்ளிச்
சிதறு புனங்கடொறுஞ்
செல்லுங் நீரா னைவனம் விளையுஞ்
செய்தொறு முரமிடவே
சந்த மணங்கமழ் திருமலை முருகா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனியயில் வல்லவா
தாலோ தாலேலோ. உ௮

தொண்டர் தொழுந்தொறு மின்ப மிகுந்துதி
சொல்லிய நல்லொலியுந்
தும்புரு நாரத ரிங்கித வீணை
சுரந்திடு மேழிசையும்
அண்ட ரரம்பையர் மங்கல கீத
மறைந்திடு துழனிகளும்
அந்தர துந்துமி யுங்குட முழவு
மதிர்ந்திடு மோதைகளும்
மண்டிய வன்புடை முனிவர் சிவாகம
வகையுஞ் சதுமறையும்
வாய்க்கும் புலவர் செவிக்கு மினிக்க
வடித்த திருப்புகழின்
றண்டமி ழின்றொனி தருதிரு மலையா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனியயில் வலவா
தாலோ தாலேலோ. உ௯

கங்குலு மங்குலு மோருரு வாகிக்
கானி னடந்ததெனுங்

காட்டெரு மைக்குலம் வேட்டுவ ரேனற்
கதிரை மிகப்பருகிக்
கொங்கவிழ் குவளை நறுஞ்சுனை நீர்கள்
குடித்து மதர்ப்புடனே
குகரக் குடுமி முழைக்குள் விடுத்த
குழக்கன் றைத்தேடிச்
செங்கண் மருண்டு கனைப்ப முலைப்பால்
சிந்தி வழிந்தோடிச்
சேரந னைந்து வெளுப்புற லாலுந்
தெய்விக நீராலுஞ்
சங்கரன் மலைநிக ருந்திரு மலைபா
தாலோ தாலேலோ
தமிழறி புலவா தனியயில் வலவா
தாலோ தாலேலோ. ௩0

தாலப்பருவ முற்றும்

ச. சப்பாணிப் பருவம்

[இருகை யொருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம்; இஃது ஒன்பதாந் திங்களில் நிகழ்வது]

அடித்துணை நினைப்பவர் மனத்திருள் விளக்க
வனற்பூ டுதித்தசுடரே
யகத்தினின் மிகக்கிருபை செனித்தருள் கொடுக்குமயி
லப்பா வினிக்குமமுதே

தொடிக்கைகள் சிவக்கம ழலைக்குரல் பிறக்கநிறை
சொற்பாக முற்றபுலவோர்
துதித்திடு புயக்கிரி துளக்குற விதழ்க்குலவு
துப்பூடு முத்தொளிரவே
மடப்பிடி நடைத்துடி யிடைக்குட முலைக்குமரி
மட்டூறி நெய்த்தகுழலாண்
மதித்திரு முகத்தினள் குறச்சிறுமி மிக்கவடி
வப்பாவை மைக்கணெனவே
தடத்தினின் முளைத்தகுவ ளைத்திரும லைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே. ௩௧

வேய்தொறு மெயிற்றியர்க டொட்டில்கட் டிச்சிகியின்
மென்பீலி யுள்விரித்து
வெம்முலை யருத்திவாய் முத்தாடி மதலைகளை
மெல்லவதன் மேல்வளர்த்தி
நேயமுற கொழுநருடன் மலைவிட் டிறங்கிவளர்
நீள்சோலை யிற்புணர்ந்து
நினைவழிய வுடைகுலைய மனதுபர வசமுருகி
நித்திரை தெளிந்துவருமுன்
தூயபூ ரணமதி தவழ்ந்தேறி யேறியத்
தொட்டிலின் கிட்டவணுகித்
துண்ணென விழித்துக் குறச்சிறார் மழலைமொழி
சொல்லிவிம் மிப்பொருமியே
தாய்முக மெனக்கண்டு மகிழ்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே

தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே. ௩உ

இருநில வரம்பையொரு குடைதனி லமைத்தர
சிளைந்திடு பெருஞ்செல்வமு
மியலாதி முத்தமிழ்ச் செஞ்சொன்முத லானபதி
னெட்டுவகை யிற்பாடவும்
மருமல ருகுத்துலவை குலவுதரு விற்சிதன்
வனமுலை திளைத்தமார்பும்
வாலமா மதிசூடி பாலலோ சனமுறு
மன்மதன் விரும்புமழகும்
அருமறை விரித்துரைசெய் சதுமுகமும் வெற்றிபுனை
யைம்படை தரித்தகரமும்
அம்புயக் கண்களும் பரமபத முத்தியுட
னத்தனையு மன்பர்பெறவே
தருபனிரு கட்கருணை புரிதிரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே. ௩.௩

வண்டுமொய்த் திலகுவெண் கேதகைப் பூவினை
மடப்பெடைக் குருகிதெனவே
வண்மைப் பெருஞ்சேவ லங்குருகு கண்டிரு
மணிச்சிறகி னலணைத்துக்
கொண்டுதுயி லப்பேடு பார்த்துப் பதைத்துக்
கொதித்துக் கொதித்துவிம்மிக்
கோபமுற் றங்கங் குழைந்தேகி யும்பர்தங்
குளிர்பொதும் பரினெதுங்க

அண்டருல கத்துள வரம்பையரு மாடவரு
மதிசயமி தென்றுகாண
வச்சேவல் பின்றொடர்ந் தோடியூ டற்குறைக
ளகலப் புணர்ந்துயினுந்
தண்டலைப் பண்ணைப் பதித்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே. ருச

கந்தமிகு முண்டகக் கண்ணனுங் கருணைபெண்
கண்ணனு முடற்கண்ணனுங்
கதிதனை வழங்குமுன் றிருமுன்பு வந்துசெங்
கதிர்வேல் புகழ்ந்திரந்து
சுந்தரக் குங்குமக் கொங்கையொரு மங்கைநஞ்
சுதையைவேட் டருளுகெனவே
சுடர்முடி துளக்கிவெகு மகிழ்வுட னகைத்தருள்
சுரந்துள மிசைந்துமறுநாள்
அந்தரத் தமரர்முசு குந்தன்முத லிம்பர்க
ளருந்தவர் பெருந்திசையினோ
ரணிமணக் கோலத்தி னதிசயங் கண்டுய்ய
வப்பரங் குன்றின்மிசையே
தந்தியை மணந்தகுவ ளைத்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட வயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே ருரு

வேறு

வம்பொன்றுஞ் சந்தொடு குரவு
மணத்த புயக்காரா
மஞ்சுந்துஞ் சுங்குல கிரியை
மடித்த வயிற்காரா
அம்பஞ்சுங் கண்பெறு குறமக
ளத்தி நயக்காரா
அன்பும்பண் புங்கொழு தொழுமடி
யற்கெளி மைக்காரா
செம்பைம்பொன் றந்திடு மொழிதிகழ்
சித்ர மயிற்காரா
செம்பொன்கொஞ் சுந்திரு மலைவளர்
செக்கர் நிறக்காரா
கும்பன்கண் டின்புறு குருபர
கொட்டுக சப்பாணி
குன்றெங்குந் தங்குஞ் சிவசுத
கொட்டுக சப்பாணி. ௩௬

வேறு

துட்ட வரக்கர்கள் பட்ட பிணக்குவை
சுற்றுக டற்பூமி
தொக்கு மறைக்கவி ழிக்கன லைக்கொடு
சுட்டட லைப்பூதி
இட்டுல கத்துள சட்சம யத்தரு
மிச்சம யத்தாக
விப்படி யுத்தம் விளைத்த களத்தி
லெதிர்த்து மறுத்தோடி

நெட்டை மரத்தியல் பைக்கொ டுரத்தொடு
நிற்குமத் தச்சூர
னெட்டுரு வத்துடல் பட்டுரு வத்தசை
நெய்த்தவு டற்சோரி
கொட்ட வயிற்படை தொட்ட திறற்குக
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி. ௩எ

அளவி லரக்கர்கள் கதறு தொனிக்குர
லசனி யிடித்திடவே
யங்கவர் செம்மணி யணிமுடி சிந்தி
யழற்பொலி மின்னோட
இளமதி யொத்தில கெயிறெனு மாம்பிமண்
ணெங்குமு றச்சோரி
யிந்திர கோப மலிந்திட வேபுவி
யில்லவிர் வில்லிடவும்
வளமை யொழித்திட வழுத வரக்கியர்
மண்டூ கம்போல
வானுல கென்னும் வயிற்பயி ருய்ந்திட
வன்சூ ரன்கால்வாய்
குளமுடை யச்சர மழைபொழி புயலே
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி. ௩அ

துடித்த தரத்தைய துக்கியு றக்கிய
சுழல்கட் டையவுணர்

சோரிகு டைந்துகு ளித்திகல் வெற்பைத்
துண்ணென நீறிட்டுப்
பிடித்தக ரத்திரி சூலியி டாகினி
பேழ்வாய் வெம்பூதம்
பேய்நரி கழுகுப ருந்துக ருங்கொடி
பெரிய விருந்தாக
வடித்தவு வர்த்ததி பாகொடு பானெய்
மதுப்புன லேழ்கடலு
மாறுப டாமல ளாவிநி ணத்தொடு
மாவடு வுங்கூட்டிக்
குடித்து மதத்தவ யிற்படை யாளே
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி. ௫௬

நெஞ்சுகு ழைந்துகு ளிர்ந்தப கீரதி
நீராட் டிப்போற்றி
நீறொடு திலகமொ ராறுசெ ழும்பிறை
நெற்றிதொ றுந்தீட்டி
அஞ்சன மன்பொடு கண்களி லெழுதியோ
ரைம்படை யும்பூட்டி
யரைவட மாழிசி லம்புகு தம்பைய
ணிந்துமு கம்பார்த்து
வஞ்சிதி கம்பரி கொங்கைசு ரந்தும
கிழ்ந்தும கிழ்ந்தூட்டி
வாய்தொறு முத்திம டிக்குளி ருத்திமென்
மழலைச் சொற்கேட்டுக்

கொஞ்சிம கிழ்ந்தருள் பிள்ளைப் பெருமாள்
கொட்டுக சப்பாணி
குக்குட மெய்த்துவ சத்திரு மலைமுகில்
கொட்டுக சப்பாணி. சய

சப்பாணிப்பருவ முற்றும்

ரு. முத்தப் பருவம்

[இது பதினொன்றாந் திங்களில் நிகழ்வது]

நித்தங் குவளைச் சுனையாடி
நெடுஞ்சோ லையிற்பூக் கொய்துகல்லு
நெகிழச் சிலம்பி னெதிர்கூவி
நெடிய வேங்கை நிழன்மேவி
அத்தஞ் சிவக்க வம்மனைபந்
தாடிக் கழங்கு மெடுத்தாடி
யரத்த மணிமின் போலூச
லாடி யாடி யுடலிளைத்துச்
சித்த மதனுக் கிளையாத
செவ்வாய்க் கருங்கண் ணெயிற்றியர்கள்
சிற்றில் விளைத்து விளையாடத்
திரிகண் மதமால் கரிக்கோடு

முத்தங் கொடுக்குங் குறிஞ்சிநில
முதல்வா முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௧

அழிந்து புவன மொழிந்திடினு
மழியாத் தோணி புரத்தின்மறை
யவர்கள் குலத்தி னுதித்தரனே
டம்மை தோன்றி யளித்தவள்ளச்
செழுந்தண் முலைப்பால் குடித்துமுத்தின்
சிவிகை யேறி மதுரையிற்போய்ச்
செழியன் பிணியுஞ் சமண்பகையுந்
தேவி துயருந் தீர்த்தருளி
வழிந்து நறுந்தே னுகுவனபோன்
மதுரங் கனிந்து கடைதுடிக்க
வடித்துத் தெளிந்த செந்தமிழ்த்தே
வாரப் பாடல் சிவன்கேட்க
மொழிந்து சிவந்த கனிவாய்ச்சண்
முகனே முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௨

தலைமுத் தொழிலு மியற்றுமயன்
றனிமா லீச னெனுமூவர்
தால மிசைப்பொன் னுரத்தின்மிசைத்
தலையின் மிசையின் றபவாகக்
கலைமுத் தமிழ்வா ணியைத்திருவைக்
கங்கை தனையுந் தரித்ததல்லாற்

காத லுடன்வேட் டகத்திலின்னங்
கருத்து நாணு திருப்பதற்கே
சிலைமுத் துதிரப் பூவாளி
செலுத்து மதனு மிரதியுமே
செவ்வாய் முத்த மிடும்போது
சேர்த்து நெருங்கு மவர்முடிநேர்
முலைமுத் தழுந்த வள்ளிபுணர்
மோகா முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௩

தகட்டிற் சிறந்த விதழ்க்கமலத்
தடத்திற் குளத்திற் றண்பணையிற்
றழங்குந் துழனிப் பெருமதகிற்
சயிலப் புதுநீர் தத்துதொறும்
பகட்டு முரட்டுப் பருவாளை
பணைத்துப் பாய்ந்து செழும்பலவின்
பழத்தைத் தகர்த்து மாங்கனியின்
படுவைச் சிதறிப் பசியமுகில்
அகட்டைக் கிழிக்க முகில்வெருவி
யழகஞ் சொரிந்து மடவார்க
ளளகத் தழகுக் குடைந்தனபோ
லங்கம் வெளிறி யணிமாட
முகட்டிற் கிடக்கும் பண்ணைநகர்
முதல்வா முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௪

தொழுது புலவர் புகழ்ந்ததண்டைத்
துணைத்தா மரையி லிருமுத்தந்
தூய கணைக்கான் முழந்தாள்செந்
துடையி லிடையி லேழுமுத்தம்
எழுத வரிய தொந்தியுந்தி
யிலங்கு மார்பின் மூன்றுமுத்த
மேய்ந்த மரங்கந் தரம்புயத்தி
லிருபத் தைந்து திருமுத்த
மழுது சிரித்து மழலைசொல்லு
மருமைத் துகிரி லாறுமுத்த
மழகு கதுப்புக் கண்குடுமி
யனைத்து மந்தப் படியுடல
முழுது முமையாண் முத்தமிடு
முத்தே முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௫

வேலைப் புனலைக் கலக்கியெட்டு
வெற்பைப் பிடுங்கிப் பந்தாடி
மேருக் குடுமி திருகியும்பர்
வேந்து தனையுங் கொன்றெழுப்பித
தூலத் துருவ மெடுத்தயனைத்
தொடரிட் டிரங்கிப் புரந்துசிவத்
தாரக மனைத்தும் விளையாட்டாற்
றொலைத்துத் துணைவ ருடன்மேவிக்
கோலச் சடிலத் தரன்செவியின்
குலவண் டினங்க ளருந்துதற்குக்

குழந்தை வயசிற் பெருமதியாற்
குமுத நெகிழ்த்துப் பிரணவத்தின்
மூலச் செழுந்தே னுகுத்தருளு
மூர்த்தி முத்தந் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தந் தருகவே. ௪௬

வேறு

திருக கர்ப்பண் பையிலி ருக்குஞ்
செழியன் முத்தந் தருகவே
தெருள்கொ டுத்திங் கெனையு ருக்குஞ்
சிறுவன் முத்தந் தருகவே
கருதி மெய்க்குஞ் சமண ழிக்குங்
களிறு முத்தந் தருகவே
களிறி னுக்குங் குறம கட்குங்
கணவன் முத்தந் தருகவே
பருவ ரற்கங் குலையொ ழிக்கும்
பரிதி முத்தந் தருகவே
பரம னுக்கும் பொருளு ரைக்கும்
பவள முத்தந் தருகவே
தருப ரைக்கும் புனன்ம கட்குந்
தனையன் முத்தந் தருகவே
சதும றைக்குந் திரும லைக்குந்
தலைவன் முத்தந் தருகவே. ௪௭

தொந்த மிட்டின் பங்கு திக்குந்
தொண்ட சித்தங் குளிரவே

சுந்த ரப்பொங் கங்கொ டுக்குந்
தொந்தி வட்டஞ் சரியவே
கெந்த மொய்க்குஞ் செம்ப தத்தின்
கிண்கி ணிப்பொன் குலவவே
கிஞ்சு கத்தின் சந்த்ர ஞெக்குங்
கிம்பு ரிக்கொம் பொளிரவே
சிந்து ரத்தின் செஞ்சி வப்புந்
திண்செ விக்குந் திகழவே
செங்க னிக்கன் புங்க ளிப்புஞ்
சிந்தை முற்றும் பெருகவே
தந்தை சுற்றுந் தும்பி மெய்ச்சுந்
தம்பி முத்தந் தருகவே
சதும றைக்குந் திருமலைக்குந்
தலைவன் முத்தந் தருகவே. ௪அ

வேறு

சினவா ளரிக்குருளை யனையா யெனக்குனது
திருவாயின் முத்தமருளே
சிதவா ரணக்கடவுண் மருகா வெனக்குனது
திருவாயின் முத்தமருளே
மனமாயை பைப்பொடிசெய் தருள்வா யெனக்குனது
மணிவாயின் முத்தமருளே
வரதா குறச்சிறுமி விரகா வெனக்குனது
மணிவாயின் முத்தமருளே
சுனைவா சமைக்குவளை யணிவா யெனக்குனது
துகிர்வாயின் முத்தமருளே

துடியாய் நடத்துதக ருடையா
யெனக்குனது துவர்வாயின் முத்தமருளே
கனகா சலக்குமரி குமரா வெனக்குனது
கனிவாயின் முத்தமருளே
கனமேக மொய்த்ததிரு மலையா யெனக்குனது
கனிவாயின் முத்தமருளே. ௨௪

சலியாது பற்பபத ஙடையாய் வனத்தினிடை
தனியே தனித்துலவியே
தடிமே னடக்குமொரு முதியோ னெனக்குறவர்
தருமா னிடத்தணுகியே
மலியா தரத்திநொடு மயறீர்வ தற்குமொரு
வழிநீ யுரைத்திடெனவே
வகைபேசி யத்திமுகன் வரவே நினைத்தவளை
மறைவாய் மணந்தகலவே
புலிபோன் மலைக்குறவர் பிறகே தொடுத்துமெதிர்
பொரவே செயித்தவர்முனே
பொருமா மயிற்பரியி னறுமா முகத்திநொடு
பொலிவா யுதித்தருளியே
கலியாண மிட்டமுறு முருகா வெனக்குனது
கனிவாயின் முத்தமருளே
கனமேக மொய்த்ததிரு மலையா யெனக்குனது
கனிவாயின் முத்தமருளே. ௫௰

முத்தப்பருவ முற்றும்

௬. வாரானைப் பருவம்

[சிறுநடையெய்தும் பருவம்; பதின்மூன்றாந் திங்களில் நிகழ்வது]

தந்தா வளமு னழைப்பமனஞ்
சற்றுந் தரியா தெழுந்துகுல்லைத்
தாமஞ் சரிய வுடைசரியச்
சக்ரா யுதத்தை முன்னடத்திச்
செந்தா மரைப்பெண் புவிமடந்தை
திகைப்போ டெழுந்து பின்றொடரச்
சேடன் முதுகு மவன்மனமுந்
திருப்பாற் கடலும் வெளிறிவெஃகப்
பைந்தார்க் கருடன் கடைக்கணருள்
பார்த்து நேரே பறந்துவரப்
பாரக் கொடிய முதலைவதைப்
படவும் பாதந் தரைப்படவும்
வந்தான் மருகா முருகாசெம்
மலையே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ௫௧

வெண்சா மரைபோற் பலவிதமாய்
விரிந்த மனத்தின் கருவியெல்லாம்
வெவ்வே றுகப் புகுத்தறிந்த
விநய மறிந்தங் குணையறிந்து

கண்சா ரொழுக விம்மிவிம்மிக்
கரைய வழுது கசிந்துருகிக்
களித்துச் சிரித்துக் குதித்தாடிக்
கவினுக் குளறத் துதித்திடுவோர்
எண்சா ணுடம்பு மினிக்கமகிழ்ந்
தெங்கும் பெருகி யலைமோதி
யிரண்டு வினையின் கரைகள்கடந்
தெழுந்த பரமா னந்தமெனும்
வண்சா கரத்தி லுதித்தசுதை
மருந்தே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே ருஉ

சினந்தான் மிகுந்து பொருஞ்சூரன்
றேவி தாலி தீப்புகுதத்
திறல்சே ரவுணர் மனைவியர்க
டிருநூ லிழந்து கைமையெய்த
அனந்தான் வெளிற நடையயிலு
மழகு கசியுங் கலைமகளு
மரம்பை மாருஞ் செழுந்திருவு
மணியுந் திருமங் கலந்தளைப்பக்
கனந்தாழ் குடுமி மலையரசன்
கரநீர் வார்க்க மேனைகண்டு
களிக்க வமரர் துதிக்கவுமை
கழுத்தி லொருமங் கலநாணை
வனைந்தா னிலகு திருநுதற்கண்
மணியே வருக வருகவே

வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ௫௩

அயல்சூழ் நாரை கணைக்கால்கண்
டணுகி யணுகிப் பின்றொடர
வன்னந் தோற்க நடந்துகளை
யகழ்ந்தே யுறுப்பின் பகைதீர்த்துப்
புயல்சூழ் மலைபோன் முலைகடொறும்
பூட்டு நீல வடம்புரளப்
பொன்னங் கொடிபோ லொல்கியொல்கிப்
பொருந்து மருத நிலங்குலவுங்
கயல்சூழ் விழியின் கடைசியர்கள்
கருத்திற் புலவி தவிரவென்று
கருகி யவர்கள் புறந்தாளைக்
கமட மிதென மள்ளர்பற்றும்
வயல்சூழ் பண்ணைத் திருநகரின்
வாழ்வே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ௫௪

அனையுங் கயிலைப் பெருமானு
மங்காப் புடனே மார்பிலெடுத்
தணியச் சமைத்த பதக்கமென
வமரர் முனிவ ரதிசயித்து
நினையும் படிக்கு விளையாட்டு
நிகழ்ச்சி புரிந்து மேருவெனு
நெகிழ்ந்த பசும்பொன் மலைமீது
நேசத் துணைவ ரிலக்கரொடு

முனையுங் கனிவும் பெறுவீர
மொய்ம்பன் முதலோன் பதுபேரு
முதிரு நவமா மணிபோல
முயன்று புடைசூழ்ந் திலங்கவங்கே
வனையு நடுநா யகமணிபோல்
வயங்கும் பெருமாள் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ருரு

தோயாத் துகிலு மரைவடமுஞ்
சுற்ற வருக வருகவே
சுரந்து வடியுங் கடைவாய்நீ
துடைக்க வருக வருகவே
ஆயா யீன்ற கங்கைநன்னீ
ராட்ட வருக வருகவே
அருமைப் பதமென் கண்ணிலெடுத்
தணைக்க வருக வருகவே
வீயா தொழுகுந் திருமுலைப்பால்
மிசைய வருக வருகவே
வீணை தெவிட்ட மழலைமொழி
விள்ள வருக வருகவே
வாயா லெனக்கோ ராணிமுத்தம்
வழங்க வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ருசு

முதிருங் கலைவா ணியுந்தமிழ்மா
முனியோ டருண கிரிமுதலோர்

மொழியுங் கவிகொள் செவியாலென்
மோட்டுச் சிறுசொற் கேட்பதுபோற்
கதிர்கொள் வடிவே லேந்தியசெங்
கையி லொருசெங் கோல்வாங்கிக்
கடம்பு புனைந்த திருப்புயத்திற்
காட்டு வேம்புந் தரித்தருளி
அதிருங் குரற்சே வலையுயர்த்த
வாண்மைக் கொருமீன் கொடியுயர்த்த
தண்ட முழுதுந் தானாகி
யைந்து தொழிலுஞ் செய்தவனோர்
மதுரை யரசு புரிந்தவுக்ர
வழுதி வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ருஎ

எதிரும் புலவன் வில்லிதொழ
வெந்தை யுனக்கந் தாதிசொல்லி
யேழைப் புலவர் செவிகுருத்தோ
டெறியுங் கருவி பறித்தெறிந்தே
அதிருங் கடல்சூழ் பெரும்புவியி
லறிந்தா ரறியா ரிரண்டுமில்லா
ராரு மெனைப்போ லுனைத்துதிக்க
வளித்த வருண கிரிநாதன்
உதிருங் கனியை நறும்பாகி
லுடைத்துக் கலந்து தேனைவடித்
தூற்றி யமுதி னுடன்கூட்டி
யொக்கக் குழைத்த ருசிபிறந்து

மதுரங் கனிந்த திருப்புகழ்ப்பா
மாலை புனைந்தான் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ருஅ

நாரி யொருத்திக் கிடப்பாக
நல்கும் பெருமா னுதல்விழியி
னெண்ணும் பொறியைப் பவனனங்கி
நடுங்கிச் சுமந்து கங்கையென்னும்
வேரிப் புனலிற் புகுத்தவவள்
வெம்பிப் பயந்து சரவணத்தின்
மீதி லிடமூ விருகுழவி
விரைந்து பிறந்தங் கழுதுவிம்மி
மூரி நெருப்பி னுடன்மடவார்
முலையுண் டுறங்கி யெழுந்திருந்து
முளரிப் பூவிற் றவழ்ந்திடவை
முகத்தோ னுடன்வந் துமைகரத்தால்
வாரி யணைக்கத் திரண்டதிரு
வடிவத் தொருவன் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே. ருகூ

வேறு

பகைநிசி சரர்கள் மனதையு மினிது
மருகிய வழகன் வருகவே
பரிபுர மதிர நடைபயில் கமல
பதமத களிறு வருகவே

மொகுமொகு மொகென நகைமணி கதற
முனிதகர் கடவி வருகவே
முருகவிழ் குடுமி யவிழ்வது வனைய
மூலேதர வருக வருகவே
அகமெனு முளரி நறவொடு மலர
வருள்வெயி லிரவி வருகவே
யரனுமை மடிபொன் னுரமிசை தவழு
மறுமுக மதலெ வருகவே
மகபதி முடியி லிலகிய சரணென்
மனமிசை புனைய வருகவே
மணமலி குவளே தருதிரு மலையின்
வருமொரு குழவி வருகவே சூய

வாரானைப்பருவ முற்றும்

எ. அம்புலிப் பருவம்

[முருகனுடன் ஒக்க விளையாடச் சந்திரனைத் தாதியர் அழைத்தல்; பதினைந்தாந் திங்களில் நிகழ்வது.]

கலேயேறி மேலேறி வந்திலகு வாயிவன்
கலேயேறி மேலேறினன்
காமனுக் கேகவிகை யாய்விரிந் தாயிவன்
காமனுக் கேகவிகையான்

நிலையாத கோட்டைகொண் டோடிவரு வாயிவ
னிசிசரர்கள் கோட்டைகொண்டா
னீடுருவ ளக்குரிமை யாகிவரு வாயிவ
னித்தமொரு குவளைபுனைவான்
தொலையாத வேலையூ டுருவிவிடு வாயிவன்
சுடர்வேலை யுருவிவிடுவான்
சொல்லிலிவ னுக்குவமை யாருமிலை நீசிறிது
தொழிலுவமை பெற்றதாலே
அலையாழி யிற்றுகில்கொ ளரியருமை மருகனுட
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௧

கொஞ்சமதி யிற்பெரிய மதியுடையொர் காணெணக்
குற்றமொரு நாட்படைத்தாய்
கூரறிவி னலறிஞ ராவலொடு காணக்
குழந்தையி லுயர்ந்ததிவனே
நஞ்சுபொதி வாளெயிற் றரவுபொர வேயுட
னடுங்கிப் பயந்தொளிப்பாய்
நாகப் பெரும்பகை துணுக்குற மயிற்பரி
நடத்திய சமர்த்தனிவனே
கஞ்சமல ராளிசுத னிடுசாப மேகொண்டு
கலையிழந் தேதிரிந்தாய்
கமலனைக் குடுமிகள் பிடித்துப் புடைத்துக்
கடுஞ்சிறை புரிந்ததிவனே
அஞ்சுமுக நாதனரு ளாறுமுக நாதனுட
னம்புலீ யாடவாவே

யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௨

ஒழியாத மறுவெனுங் குட்டரோ கத்தின்
னுடல்கூனி வீங்கிவாடி
யுற்பலத் திருமலைதொ ழாதவர்கள் போலவே
யுலகிடை பிறந்திருந்து
பழியால் வரும்பகைப் பாம்புனை விழுங்கவும்
பதைப்பதைத் தேசுழன்றாய்
பரிவினொடு சந்நிதி புகுந்தவர் பெரும்பிணி
பறத்துவது நீயுமறிவாய்
விழியா லிவன்சிறிது கருணைபுரி யக்கூனும்
வெப்புந் தவிர்ந்ததுன்றன்
மேன்மைக் குலஞ்சொல்லும் வெந்துய ரொழிந்திடுவை
வெய்யபகை யுந்துடைப்பாய்
அழியா வரம்பெறுவை யருள்பெறுவை முருகனுட
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௩

தமராகி யாயிரத் தெட்டண்ட மேவிய
தைத்திய ரொடுஞ்சூரனுந்
தம்பிமார் மைந்தர்கள் மகிழ்ந்திட விரத்தச்
சமுத்திர மெழுந்துபொங்க
எமராய னுகமொரு நுளையன்வலை வீசியுயி
ரென்னுமீ னைப்பிடிக்க
வீராறு செங்கதிர்கள் வனசமல ராகவே
யெழுமுகில்சை வலமாகவும்

உமராக வேசூ ழுடுத்திர ளெலாமதி
ஒதித்தபுற் புதமாகநீ
யொருதோணி யாய்மிதந் தோடிக்க ளேபரத்
தோங்கஞெருறு மேங்கிமோத
அமராடு திண்டிறற் சேவகப் பெருமான்மு
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொளு விருப்பவனெ
டம்புலீ யாடவாவே. ௬௪

புத்திதனி லிரவிநீ யட்டமஞ் செவ்வாய்
பொருந்திய களத்திரத்திற்
புதனுலின் மூன்றினிற் பொன்வெள்ளி யாறினிற்
போற்றுசனி சென்மமாகத்
துத்திதிக ழும்படப் பாம்புகளொ ரொன்பதிற்
றேன்றிப் பகைத்தபகையுந்
துட்டமிரு கங்களும் பேயுநோ யுங்கலித்
துன்பமும் வெம்புபடையுங்
கத்துபுன லுங்கனலு மவமிருத் துங்கொலைக்
காலனுஞ் செய்வினைகளுங்
கண்டதுண் டப்படக் கூவுசே வற்கொடிக்
கட்டியழி யாதசெல்வம்
அத்தனையு மேகொடுத் தன்பருடன் வாழ்பவனெ
டம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொளு விருப்பவனெ
டம்புலீ யாடவாவே. ௬௫

மிடலொடு திசைசுமக் கின்றவே ழங்கவள
வேழஞ் சுமப்பதாக

மேதினிமுதலான புவனங்க டாங்குமக
மேருவே தூணதாகக்
கடலேழை யுங்குடித் தெழுமேக மேழுங்
கடாம்பொழி கவுட்களாகக்
காஞ்சனச் சுவர்சுற்று மண்டமொரு கூடமாய்க்
கந்தமலை யிற்பிறந்து
திடமான தடைமீறி யேபூத வெளியெலாந்
தெருவீதி யாய்நடந்து
திங்களுன் கலைகளைக் கொம்புக்கு மாறெனச்
செங்கைநீட் டிப்பிடிக்கும்
அடலானை யேறுங்கு மாரரா வுத்தனுட
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௬

என்றைத் தடுத்துவெளி யெல்லா மறைந்திட
வெழுந்தசூர் மாவொரயிலா
லேறுபட் டிருதுண்ட மாகவொரு துண்டமிவ
னேறுமயி லாகவொன்று
வென்றித் துணைச்சிற கடித்தண்ட கூடமும்
வெடித்திடக் கூவிவானின்
மீனெநற் பொறியெனக் கொத்திக் கொறித்துனையும்
வெண்சோறி தென்றுதாக்கிக்
குன்றக் குறத்தியெம் பெருமாட்டி யைப்பெறுங்
குலமா னிருத்தல்கண்டுங்
கோமளக் குகனிவன் விருப்பொடு தரித்திடுங்
குவளைச் சகாயனென்றும்

அன்றைக்கு நின்னுயிர் கொடுத்தசர ணயுதனொ
டம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௭

பணிலமுழுத் தும்பவள முஞ்சாலி னூடெழும்
பசும்பொன்னு நீலமணியும்
பன்னிறக் கதிர்விரித் தந்நிலத் தரசன்விற்
பான்மைகாட் டக்குரண்டம்
பிணிமுகத் துருவடைந் தருகுறுஞ் சேவலைப்
பேடுதே டப்பெடையினைப்
பேராத சேவற் பெருங்குருகு தேடவது
பேதைக் கடைச்சியர்கள்கண்
மணிநிழற் கதுவுறப் பார்த்துமகி ழக்கண்கள்
வாய்ந்தசிறை யும்படைக்க
மள்ளாது கண்டுகண் டேமுருக னேறுமயில்
வாகனமிதென்று போற்றும்
அணிவயற் பண்ணைப் பதிக்குமர நாயகனொ
டம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௬௮

வன்புடைய கண்டக ரெனுங்கொடிய நிசிசரர்கள்
வாழ்பதிம கேந்திரத்தின்
மாமதி லிடித்தவுண ரைக்கொன்று கொன்றுதிரை
வாரியிற் பிணநிரப்பித்
தென்புலத் தெப்புரமும் வீரசொர்க் கத்தினுஞ்
செருநருயி ரேநிரப்பித்

தேவலோ கத்தினிற் கற்பகச் சோலையிற்
றெய்வச் செழும்பிடியுடன்
என்புநெக் குருகவுட லம்புளகம் வரமனமு
மிளகியிள கித்தெணீரா
யிருவிழியி னுந்தரள மாலைவர மால்கொண்
டிசைந்துதொழு மேழையடியார்
அன்பெனுஞ் சேவக மடைந்தமத யானையுட
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௯௯

திருமலைக் கயிலையிற் பரமனுமை நடுவினிற்
சேர்ந்திவ ணிருக்குநாளிற்
றிருமா லயன்சதக் கிருதுமுத லமரர்சூர்
செய்குறை யிரந்துரைப்பப்
பொருபடைத் தலைவருந் தம்பிமா ருந்திறற்
பூதப் பெரும்படைகளும்
புடைவரத் திண்டேர் நடத்திமா யாபுரி
புகுந்தொரு பொருப்பினோடு
மொருதனித் தாருகனை வென்றவலி கண்டுகண்
டுரிமைபெறு தேவகிரிமே
லும்பரிறை யுங்கமல னுந்தேவர் யாவரு
முவப்புட னருச்சனைசெயும்
அருமணிப் பரிபுரத் திருபதத் தொருவனுட
னம்புலீ யாடவாவே
யருட்டிரு மலைக்குடுமி யிற்கொலு விருப்பவனொ
டம்புலீ யாடவாவே. ௭0

அம்புலிப்பருவ முற்றும்.

அ. சிற்றிற் பருவம்

[சிறு - இல்; - சிற்றில். சிறுமியர் கட்டிய சிறு வீடுகளைச் சிதைத்தல். பதினேழாம் திங்களில் நிகழ்வது.]

கூண்டமாயப் பரசமயக்
குழியின்வீழ்ந்தங் கழியாமற்
கொங்கைமலையு மடவார்கள்
குழற்காட்டினும்போய்ச் சுழலாமற்
பூண்டவிரதச் சைவநெறி
புகுந்துசரியை கிரியையொடும்
புனிதச்சிவயோ கமும்புரிந்து
பூதவீட்டைச் சுத்திபண்ணி
ஆண்டகுரவ னுனதருளா
லருண்முப்பொருளும் பிரித்தறிந்தங்
கத்துவிதத்தி னுருவடைந்த
வடியார்சிரத்தி னயன்பொறியைத்
தீண்டியழிக்குஞ் சேவடியாற்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவழுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எக

நேயமுடைய வடியவர்க்கு
நிகழுஞ்செனனப் பிணியல்ல
நித்தம்பரவுங் கடவுளர்க்கு
நிருதர்புரிந்த சிறையல்ல

மாயமுடைய கிரவுஞ்ச
மலையுங்கடலுஞ் சூருமல்ல
வலியகுறவர் காவலல்ல
மழலைக்குறத்தி குமருமல்ல
தூயவமரர் முனிவர்சிவத்
துரோகமல்ல மேருவல்ல
துங்கச்சிலைவே ளுடலமல்ல
துதிக்கும்புலவர் வறுமையல்ல
தீயபுரமு மலவவைபோற்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவழூந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எஉ

பாடக்கிடையாப் புகழைவெள்ளைப்
பாட்டிற்புனைந்து புகழ்ந்திடுவேம்
பவனிவரும்போ தயினிசுற்றிப்
பரவிப்பரவிக் கடன்கழிப்பேங்
கூடக்கிடையாத் திண்புயத்தைக்
கூடுங்குறத்தி குஞ்சரிக்குங்
குலவுமாய ரிகுளையராய்க்
குற்றேவலிலே சஞ்சரிப்பேஞ்
சூடக்கிடையாத் தண்டையந்தாட்
டுகளைத்துடைத்துத் தாலாட்டித்
தொட்டிலுழைவைத் தாட்டிடுவேஞ்
சோதிக்கடவு ளுமைமடந்தை
தேடக்கிடையாத் திரவியமே
சிறியேஞ்சிற்றில் சிதையேலே

செல்லுத்தவழுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எ௩

வருநாமகட்குத் திருமடந்தை
மாமிக்கொடுமை புரியாமல்
மாமிதனக்குக் கலைவாணி
மருகிக்கொடுமை செய்யாமல்
ஒருநாட்கொருநா ளுவகைபொங்கி
யொருவர்க்கொருவர் களிப்பெய்தி
யொளிர்செங்கமல வெண்கமலத்
துறையும்பான்மை போன்மகிழ்ந்து
தருநாகரிகத் தாடவர்க
டன்மார்பினுநா வினுமேவித்
தவிராச்செல்வத் தொடுகல்வி
தழைத்துச்செழிக்கும் வடவாரித்
திருநாடுடைய குகப்பெருமாள்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவழுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எ௪

தொனிக்குந்தொடிக்கைக் கடைசியர்க
டுண்ணென்றெழுந்து குரவைசெய்து
துள்ளிப்புதுநீர்ச் செழுங்கழனி
தொறுநாணடவு தொடங்கிநட்டுத்
தனிக்கு மனத்தான் மருதநிலத்
தலைவர்ப்போற்றிக் கடமதுவைத்
தடக்கைவள்ளத் தினில்வார்த்துத்
தயவாயருந்த வம்மதுவுட்

பணிக்குங்கருணை முகமளக
பாரந்தோன்றப் பகையிரவு
பரந்ததெனமள் ளரைநினைந்து
பகற்போதினுமள் ளியர்க்காசை
செனிக்கும்பண்ணை நகர்க்கரசே
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவழுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. ௭௫

அல்லைத்திடுங்கூந் தலம்பிடித்தெய்
வானைத்திருவைப் பரங்குன்றி
லயிராணியும்விண் ணவர்க்கிறையு
மளிப்பமணஞ்செய் தருளினவன்
வல்லைத்திடும்பூண் முலைச்சிறுமி
வள்ளிதனையுந் தினைப்புனத்தில்
வரிவிற்குறவன் குறத்திதர
மணந்தானென்று மொழிந்தேமோ
கல்விச்செருக்கால் விளையாட்டுக்
களிப்புச்செருக்காற் சூர்தடிந்த
கடியசெருக்காற் சமண்பகையைக்
கடந்தசெருக்கா லிளஞ்செருக்காற்
செல்வச்செருக்கான் மனச்செருக்காற்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவழுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. ௭௬

காவிச்சுனைநீர் குடைந்தாடிக்
கரையிலிருந்த தொழுத்தைமணங்

கரையக்கருதி யுருவேற்றிக்
கன்னிமாரை யும்பரவி
ஆவிப்புலனின் றுருகமகிழ்ந்
தாடிப்பாடி யங்கைகொட்டி
யருமைப்புகழைப் புகழ்ந்துபுகழ்ந்
தங்கம்பிரதக் ஷிணமாகத்
தூவிச்சிகரச் சினகரத்தைச்
சுற்றிப்பரிந்து கந்தசஷ்டி
சோமவாரங் கார்த்திகைநாட்
சுக்கிரவாரந் தோறும்வந்து
சேவித்துனையே தெரிசிப்பேஞ்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவமூந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. ௭௭

மருமாலிகைப்பூங் குழன்மடவார்
வாவிகுடைய வவர்துகிலை
வாரிக்குருந்தின் மிசையேறி
மடநாண்விரகந் தலைக்கொண்டு
கருமாநாகஞ் செந்நாகங்
கலந்ததெனவவ் வனிதையர்கள்
கையானிதம்பத் தலம்பொதிந்து
கருத்துந்துகிலு நின்றிரப்பப்
பெருமாயைகள்செய் திடைச்சியர்கள்
பின்னேதொடர வேயிசைத்துப்
பேய்ப்பெண்முலையுண் டுயிர்வாங்கிப்
பெண்களிடத்திற் குறும்புசெயுந்

திருமான்மருக னலவோநீ
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவமுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எஅ

கந்தப்பதுமச் சரவணமுங்
கந்தபுரியுங் கந்தவெற்புங்
கழுநீருதிக்குந் திருத்தணியுங்
காஞ்சிபுரத்தின் மாவடியுஞ்
சொந்தப்புரியே ரகத்துடனே
சோலைமலையும் பரங்குன்றுந்
துங்கத்திருவா வினன்குடியுஞ்
சோதித்திருவேங் கடமலையுஞ்
சந்தப்பொதியுங் குற்றாலத்
தலமுமிலஞ்சித் தமிழ்ப்பதியுந்
தழைக்குங்கதிர்கா மத்தடமுஞ்
சயிலந்தோறும் விளையாடிச்
செந்திற்பதியும் புரந்தபிரான்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவமுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. எகூ

பொன்னிறமாய்ச் சிவந்துமுளை
புறப்பட்டெழுந்து மரகதத்தின்
பொலிவுபெறவே குருத்துவிட்டுப்
பூதநாதன் படைபோல
மன்னுமருங்கிற் கிளைகிளைத்து
வள்ளர்குணத்தோர் செல்வமென

வளர்ந்துதூணி வனப்பிதென
வசியப்பசியப் பாம்பிதெனத்
துன்னும்பொதியாக் கதிரீன்று
துட்ட ரெனவே செம்மாந்து
சொல்லுமறிஞர் போலருட்பால்
சுரந்துசுரந்து தலைவணங்குஞ்
செந்நெல்வயற்பண் பைம்பதியாய்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
செல்லுத்தவமுந் திருமலையிற்
செல்வாசிற்றில் சிதையேலே. அ௰

சிற்றிற்பருவம் முற்றும்.

கூ. சிறுபறைப் பருவம்

[சிறு ஓசைக்கருவிமீது ஒலியிட்டு மகிழ்தல்; பத்தொன் பதாம் திங்களில் நிகழ்வது.]

சங்குற்ற செங்கைதொட் டழல்கரிய தாகவே
சயமா முடித்துமேவுந்
தவிராத கற்புடைய தையலர்கள் பூண்முலைச்
சையோக மேதணந்து
பொங்குற்ற பள்ளியுட் சப்ரமஞ் சத்தினிற்
பூவணையு மேதுறந்து
பொதுமாதர் சேரியி லிராப்பக னடந்தவர்கள்
போகம்வேட் டிடும்விடர்கள்போற்

கொங்குற்ற சோலையும் புளினமு மிகழ்ந்துபைங்
கூழ்ச்செந் நெலைத்துகைத்துக்
கோடுகொண் டிக்குக் குலங்களைய, முறித்திளங்
கொடிவள்ளை யைக்கறித்துச்
செங்கட் கரும்பகடு சேருடும் வளநாட
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அக

வள்ளிமலை தனின்முதிய சிவமுனிவன் முன்னரொரு
மான்வந் துலாவமானை
மாமுனிவ னயனத்தி னுற்புணர்ந் திடவதன்
வயிற்றிடை கருப்பமாகித்
துள்ளியயர் வோடுவயி றீற்றுழைந் தீன்றெயினர்
தொட்டகுழி யிட்டகலவுந்
துங்கச் சிலைக்குறவர் மரகதச் சிலையெனத்
தோகையைக் கண்டெடுத்து
விள்ளுமுவ கைக்கடல் படிந்தவர்கள் சிற்றூரில்
விரைவினொடு கொண்டுவந்து
வீறுடன் வளர்த்துத் தினைப்புனத் தினில்வைத்த
வேட்டுவ மடந்தைபாற்
றெள்ளுதினை மாவுக் கலாவுற்ற மோகனே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அஉ

பெண்கள்சங் கத்தினே டில்லைநகர் விட்டுப்
பெயர்ந்துதிரு மலையின்மேவிப்

பிரசவேர் கல்லிப் பிடுங்கிவிளை யாடியொரு
பேதைமடி யிற்றுயிலவுந்
தண்புனற் சீனையுண்டு பூவுண்டு நாளும்வட
சாரலிடை வைகுமெனவே
சண்முகப் பிள்ளைநீ யருள்புனைந் திடவுனைத்
தயவினொடு கண்டுபோற்றிப்
பண்புபெற் றிடுசுப்ர மணியனொடு விக்கிரம
பாண்டியன் செங்கையாலும்
பங்கயக் கண்ணனருள் குஞ்சரி குறத்தியிரு
பாவையர்கள் பார்வையாலுந்
திண்புயத் தைந்துகட் குவளைசூ டுங்குளக
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அ௩

வனமுழங் குங்கவிக் டாவவளர் தெங்கின்மிசை
மலிமுப் புடைக்கனிகளு
மாங்கனி பலாக்கனிகள் சம்பீர மென்கனிகண்
மாறுமல் வீழோசையும்
இனமுழங் கும்பழைய சைவர்கள் சிவாகமமு
மின்னிசைத் தேவாரமு
மெங்கணும் பரவச முடன்பரவு மடியவ
ரியம்புமா கரசத்தமுங்
கனமுழங் குங்கன முழக்கமும் வடவருவி
கல்லென வொலிக்குமொலியுங்
கரகமுனி முதலினோர் வேதபாராயணக்
கம்பலையு மும்பர்முரசுந்

தினமுழங் குஞ்சித்திர சபைநடன னருள்புதல்வ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அ௫

தண்டைகள் சிலம்புகள் சதங்கைகள் பதங்களிற்
சரிகலந் திசைமுழங்கத்
தாமரைப் பன்னிரு தடக்கையில் வியப்பொடு
தரித்தபொன் வளைமுழங்கத்
தொண்டர்கள் விருப்பொடு தெருட்பெறு திருப்புகழ்
துதித்திடு துதிமுழங்கச்
சுந்தரத் திருவரையி லரைவடக் கிண்கிணிச்
சோதிமணி தான்முழங்க
அண்டருல கம்புவி யனந்தனுல கெவ்வுலகு
மணிமணப் பறைமுழங்க
வறுசமய மல்லாத பரசமய வாதிக
ளகத்தொடு மிகுந்தவவுணர்
திண்டிறன் மனத்திற் பெரும்பறை முழங்கநீ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அ௬

பொருவரிய கயிலைமலை யண்ணல்கைச் சூல்முழும்
போராழி யுங்குளிசமும்
பொங்குந் திருப்புகழ்ச் சாணைதீட் டிக்கதிர்
பொலிந்திலகு கூர்மைபெறவே
ஒருபெரிய வீரவேல் சூரனுர முங்கிரியு
மூடுருவி யோடிமீள

வொல்லையி லெரிந்துபகை வென்றுசே வற்கொடி
யுயர்த்தசே வகமிருந்துந்
தருநிழலி லரசுபுரி யரசனருள் குஞ்சரி
தடங்கண்வேற் கஞ்சியஞ்சித்
தையலவள் குங்குமச் சந்தனச் சேறுடன்
றகரமிரு மதமொழுகிய
திருமுலைக ளென்னுமிரு மலையர ணடைந்தவன்
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. ௮௬

கத்துபுன லருவிசொரி பொதியமலை யிற்றிகழ்
கடத்தினி லிருந்தெழுகையாற்
கடல்கடு புகுதலான் மலையையு முறித்துக்
கயற்புல மழுத்திவிடலால்
அத்தர்திரி கூடத்தர் திருமவுலி தீண்டிநின்
றபிடேக மாட்டுகையினு
லன்புட னடுத்தவர்க் கருள்புரிந் திடுகையா
லழியாத சாபமிடலாற்
பத்திமிகு முத்தமத் தவமுனிவர் பாலிகல்
படைத்தகரை மீறிவரலாற்
பாரமா கிச்சிறிய நாமமுற லாற்கலை
படித்தகுறு முனியைமானுஞ்
சித்திர நதித்தலைவ முத்தமிழ் முதற்புலவ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. ௮௭

உறுநாக முங்கமட முங்கனக மேருவுட
ஞேரேழு திரைவாரியு
முட்புறப் போராழி யுஞ்சக்ர வாளகிரி
யுந்திசை சுமந்தகளிறும்
இறுநாளி லவையவை படும்பாடு படவமர
ரேங்கிக் குதித்தாடவே
யிப்படி மிகுத்தபகி ரண்டமு நடுங்கவசு
ரேசன்மன முஞ்சலிப்ப
நறுநான வார்குழற் பதுமைமுத லவுணர்குல
நங்கையர்கண் மங்கலப்பொ
ணுற் றுதிர்ந்துவிழ வேணுப் பெருஞ்சிலையி
ணுண்வளை தேற்றிவாங்கிச்
சிறுநாண் முழக்கிநிசி சரர்தள முழக்குநீ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. அ௪

தையலர்க ளுடிபெழு மூடறீர்ந் திடவவர்க
டாளையிளை ஞோர்கள்வருடிச்
சந்திரதில கங்குழைத் திந்துநுத லுக்கழகு
தருதிலக மேபுனைந்து
தொய்யிலெழு திக்கொங்கை மேலுத்த ரீயமுஞ்
சுடர்மணிக் கலனும்வீக்கிச்
சுந்தரப் பொன்மேனி யணிபணி திருத்திவேற்
றுணைக்கஞ் சனங்கடீட்டி
மைபொழுகு குழன்முடித் தவர்முடித் திடவுமதில்
வண்டுமொய்த் திடுதல்கண்டு

வஞ்சியிடை முறியுமென வம்மலர் கழித்தும்பர்
வனமலர்கள் கொய்துசூட்டுஞ்
செய்யமணி மேடைதிகழ் பண்பைநக ருக்கதிப
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. ௮௯

மருவாத பாலையிற் பொய்யா மொழிக்குமுன்
வந்தொரு செழுங்கவிதையு
மாறுன சூரன்முன் றம்பிநீ தூதுபோய்
வாவென் றியம்புமொழியுங்
குருவாக வந்தருண கிரியைத் திருப்புகழ்க்
கூறென முதற்சந்தமுங்
கும்பமுனி யிருசெவி மனத்தொடு சரீரமுங்
குளிரமுத் தமிழினியல்பும்
அருவாய் மிகுந்தபல வுருவாய் நிறைந்தருளு
மப்பனுக் கொப்பிலாத
வானந்த மதுரரச மொழுகுதே வாரமுட
னழியாத வொருவாய்மையுந்
திருவாய் மலர்ந்துரைசெய் குமரகுரு நாதனே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கமுறு திருமலை யருட்குமர
சிறுபறை முழக்கியருளே. ௯௰

சிறுபறைப்பருவம் முற்றும்.

ம. சிறுதேர்ப் பருவம்

[சிறுதேர் உருட்டி மகிழ்தல்; இருபத்தொன்றாந் திங்களில் நிகழ்வது.]

இசைக்குழலும் வீணையுங் கஞ்சமும் பல்லியமு
மெல்லாம் பயின்றுபாடி
யேறுதக ராணைபரி தேருகைத் துங்கடல்க
ளேழையுந் துளியாக்கியே
வசைத்தொழி லரக்கர்க டுணுக்கென மலைத்தமரர்
வஞ்சகமி தென்றயிர்ப்ப
வானவர்க டானவர்கள் செய்கையென் றேமதி
மருண்டுளம் வெருண்டுசோர
மிசைப்படு முடுக்கதிர் களைத்தலை மயக்கிமக
மேருவை முறித்துழக்கி
விண்டுவிண் டண்டங் குலுங்கக் குலுங்கநவ
வீரர்களி லக்கர்சூழத்
திசைக்கிரி யனைத்தையு முருட்டிவிளை யாடுநீ
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. சூக

புவியுலகு துயரகல வசுமேத யாகம்
புரிந்துபல வேள்வியாற்றிப்
புண்ணியமும் வீரமுஞ் செல்வமுங் கல்வியும்
பொன்றாத வாடவர்களால்

அவியுணவை யருந்தினம் விழைத்தும்பர் வாய்வயி
றனைத்துந் தெவிட்டவூட்டி
யானந்த மதுபெருகி மனதுருகி விழிசொருகி
யசையாமன் மேடைதோறுங்
குவியுபய முலையின்மிசை வீணைசேர்த் துச்சுருதி
கூட்டியெழு கரமுமூட்டிக்
கோதையர் குயிற்குதலை மழலைமொழி யமுதினொடு
கூடவா சிக்குமிசையாற்
செவியுணவு மன்னவற் குதவுபண் டைக்கதிப
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டி யருளே. கூ௨

உகமுழும் பரித்தொகை கரித்தொகைபல் லிரதமுட
னொளிரும்வா ளவுணர்மாள
வுன்னுடைய போர்வாழி சென்றறுப் பச்சூர
னொருவனே நின்றுநெஞ்சை
அகமுழும் பெருங்கவலை கொண்டதி சயித்துவிழி
யழலுகுத் தெயிறதுக்கி
யப்படி யவன்படையு மிப்படி முடிப்பனென
வன்னவன் முன்னியேவப்
புகழ்கொண்ட திறல்வீர வாகுவுட னவவீரர்
பூதர்க ளிலக்கர்தம்மைப்
புந்தியை மயக்கியொரு நொடியில்வா ரிக்கொண்டு
போயண்ட கோளகையின்மேற்
றிகழிந்திர ஞாலப் பெருதிதேர் பறித்தநீ
சிறுதே ருருட்டியருளே

சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே.
உருத்தார வாரித் திடுங்கொடிய நிசிசர ௯௫
ருமாபதி வலக்கணைதிரு
மொருமருக னடவுகளி ளுருத்திருந் தோடவே
யும்பர்கோ மான்புரக்குந்
தருத்தாம நந்தன வனஞ்செழித் ததிலுறு
சராசர மெலாந்தழைப்பச்
சாபநா ணும்பூணு மாபரண முந்திகழ
சரக்கறை மிகத்தழைப்ப
மருத்தா மரைத்தவி சுடைப்பாக னுஞ்சிலை
வளைத்தெய்தி டாதகணையும்
வாசியும் பேசிய திருப்புகழ் விருப்புடன்
வழுத்தித் துதிக்கவந்த
திருத்தாதை பேறும் பெருந்தேரும் வாழ்கவே
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௯௬
கனந்திகழ் கிரிக்குல மிரண்டையு மெறிந்துவெங்
காஞ்சனத் தளிர்மாவையும்
கண்டதுண் டப்பட முறித்திரு வகைப்புலவர்
காரகந் தூள்படுத்தி
இனந்தனை முடிந்தவ னிவன்றனையும் வெல்வதற்
கிதுசமய மென்றுமலைக
ளெல்லாந் திரண்டுபய மாகிமா வடுவுட
னிணங்கியம ராடுவனபோல்

வளைந்தனை விருப்பொடு புரந்தருள் குறத்திமான்
மதமொழுகு வனமுலைகளும்
வள்ளைச் செழுங்குழையில் வாசக் கருங்குழலில்
வாவிவிளை யாடுவிழியுந்
தினந்தின முரத்தொடு பொரக்குழையும் விரகனே
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௬௫

பெருகுகரு ணைக்கட லுவட்டெறிந் தருளொழுகு
பெரியபன் னிருவிழிகளும்
பேரழகு பெறுநுதல் களுந்திலத முந்தெருட்
பிரணவஞ் சொலும்வாய்களும்
இருவனிதை யர்க்குமயல் செயுமந்த காசமுட
னிலகுமீ ராறுகுழையு
மேரிலகு நாசிகள் கபோலங்க ளத்தனையு
மெழில்சிறந் தொளிததும்பி
முருகுகமழ் சண்முகத் தாமரைக ளேயின்னு
முன்னும்விக சித்திடுதலான்
முத்தமிழ்ப் புலவர்க்கு மடியர்க்கு மமரர்க்கு
முனிவரொடு சூரனுக்குந்
திருமுதுகு தாராத தண்ணளிச் சேவகன்
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௬௬

அரிக்குமய னுக்கும்வெரு வாதசூர் வென்றதுகை
யயிலோவன் னோர்கள்படையோ

வப்பனுக் கும்பொரு ணிரப்பிய குருக்களென்
றுரணத் தொகைபுகலுமே
பரிக்குமயி லுக்குமொரு சேவற் கொடிக்குமிணை
பகரவொரு பொருளுமில்லைப்
பதினு யிரங்கோடி மன்மதன் னழகுநின்
பாததூ ளிக்குநிகரோ
புரிக்குளுயர் பொன்னுலகு நின்னுடைய பண்பா
புரிக்குநிக ரொப்பாகுமோ
பூதர மெலாமிருந் துஞ்சுனையி லோர்குவளை
பூத்ததிரு மலையொக்குமோ
தெரிக்கிலுல கத்துவமை யில்லாத தெய்வநீ
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௬௭

பாரோடு பதினாலு லோகத்தி லுள்ளவெம்
பழியோடு பாவமோடப்
பஞ்சமோ டக்கொடுமை யஞ்சியோ டத்தமிழ்ப்
பாவலர்கள் வறுமையோடச்
சூரோட வவுணர்கள் பயந்தோட வானவர்க
டுன்பங் கலங்கியோடச்
சொல்லோடு பழகாத புலவரோ டப்பழைய
தொண்டர்மன மாயையோட
வாரோடு கொங்கைமட வாரோடு மிளைஞர்தம்
மனையோடு மேவிவாழ
வந்துதெரி சித்துளோர் பிணியோட வங்கவர்
மனத்துய ரனைத்துமோடத்

தேரோடி வரும்வீதி திகழ்பண்பை வாழவே
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௬அ

பொன்மௌலி யுங்கருணை பொழிவதன முந்திருப்
புருவமு நெற்றியழகும்
புண்டரிக நயனவரு ளுங்குழைக ளுந்தமிழ்ப்
புத்தமுத மொய்த்தவாயும்
விண்மலிந் திலகுகூ ரிபதுண்ட முங்கவின்
விளங்கியக போலங்களும்
வெண்டாள மாலையணி கண்டமுந் திண்புயமும்
வேலுமுள ரிக்கைகளும்,
பண்மணியு நூலுமணி மார்பமுந் தோயாத
பட்டுடையு மிக்கதண்டைப்
பாதமுந் தோகைமயி லுஞ்சிந்தை யுள்ளே
பதித்துத் துதிக்குமடியார்
சென்மவிருண் முழுதும்விடி யக்கூவு சேவலாய்
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௬௯

மங்கல மடப்பிடி குறக்கொடி யிடத்தினும்
வலத்தினு மிருந்துவாழ்க
மாமயிலும் வாழ்கவதன் மேலிலகு நூபுரம்
வனைந்தசே வடியும்வாழ்க
பொங்கொளி தயங்குதிரு வாபரண முந்நூல்
புனைந்திடுபொன் மார்பும்வாழ்க

போர்வேலு மீராறு செங்கையும் பன்னிரு
புயங்கள்சுந் தரமும்வாழ்க
தங்குகரு ணைக்கண்க ளாறிரண் டுந்திருச்
சண்முகத் தருளும்வாழ்கத்
தாழ்குழைமுந் நான்கினொடு பவளவா யாறுடன்
றடமகுட மினிதுவாழ்க
திங்கண்மும் மாரிபொழி யச்சேவல் வாழ்கநீ
சிறுதே ருருட்டியருளே
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே. ௰

திருமலைமுருகன் பிள்ளைத்தமிழ்

முற்றும்

பாட்டு முதற்குறிப் பகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அடித்துணை	உங	குமரன்சர	உய
அயல்சூழ்	ஙகூ	கூண்டமாயப்	ருய
அரிக்குமய	சாசா	கூராடும் வேல்	கக
அல்லைத்திடுங்	ருங	கொஞ்சமதி	சச
அழிந்துபுவன	ஙக	கொந்துகமழ்சர	கஉ
அளவிலரக்	உஅ	கொந்துகமழ்ந்திடு	கரு
அனையுங்கயி	ஙகூ	சங்குற்றசெங்	ருசா
இசைக்குழலும்	சாங	சலியாதுபற்	ஙசா
இச்சைக்கிசைந்	ரு	சினந்தான்மிகுந்	ஙஅ
இந்துநெடுஞ்	உக	சினவாளரிக்	ஙரு
இருநிலவரம்	உரு	சீரார்கம	உ
இனமுனிவரர்	கங	சுரரைவளைத்	ரு
உகழும்பரித்	சாச	செப்பாமோனப்	ககூ
உதரத்திடையி	சா	தகட்டிற்சிறந்	ஙஉ
உருத்தாரவா	சாரு	தண்டைகள்சி	ருகூ
உறுநாகமுங்	சாக	தந்தாவள	ஙஎ
ஒழியாதமறு	சரு	தமராகியா	சரு
எதிரும்புல	சக	தருவிற்கிறை	அ
என்றைத்தடுத்	சஎ	தலைமுத்தொழி	ஙக
கங்குலுமங்	உஉ	திருநகர்ப்பண்	ஙச
கத்துபுன	சாய	திருமலைக்கயி	சகூ
கந்தப்பதுமச்	ருரு	துடித்ததரத்	உஅ
கந்தமிகு	உசா	துட்டவரக்	உஎ
கலையேறிமே	சங	தையலர்களு	சாக
கனந்திகழ்கி	சாரு	தொண்டர்தொழுந்	உஉ
கன்னங்கரி	ககூ	தொந்தமிட்டின்	ஙசா
காயொடுபூ	கசா	தொழுதுபுல	ஙங
கால்பெயர்த்	கங	தொனிக்குந்தொ	ருஉ
காவிச்சுனை	ருங	தோயாத்துகி	சாய

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
நாரியொருத்	௪௨	மகரக்கட	௧௫
நித்தங்குவ	௩௰	மங்கலம	௬௮
நி◌ம்வளர்த்தி	௪	மங்காதகற்	௧௧
◌டுங்கரு	௧௮	மதமலைது	௨௧
நெஞ்சுகுழைந்	௨௯	மருமாலிகைப்	௫௪
நேயமுடைய	௫௰	மருவாதபா	௬௨
பகைநிசிசரர்	௪௨	மனத்தினினி	௰
பசையறுநெஞ்	௧௪	மிடலொடுதி	௪௯
படியேழுல	௭	முதிருங்கலை	௪௰
பணிலமுத்தும்	௪௮	மையற்குற	௧௭
பண்டைக்கொடி	௧௭	வட்டநிலத்	௯
பண்ணம்பணத்	௮	வண்டுமொய்த்	௨௫
பாடக்கிடை	௫௧	வம்பொன்றுஞ்	௨௭
பாரோடுப	௬௭	வருநாமகட்	௫௨
பிள்ளைத்தமி	௧	வள்ளிமலை	௫௭
புத்திதனிலி	௪௬	வனநதியறு	௩
புவியுலகுது	௬௩	வனமுழங்கும்	௫௮
பெண்கள்சங்கத்	௫௭	வன்புடைய	௪௮
பெருகுகருணைக்	௬௬	வெண்சாமரை	௩௭
பொருவரிய	௫௯	வெள்ளைக்கண	௧
பொன்மௌலி	௬௮	வேய்தொறுமெ	௨௪
பொன்னினிற	௫௫	வேலைப்புன	௩௩

